21.02.2024

O.S.No.400/2013

பி.வா.சா.1.திரு.பசும்பொன் முத்துராமலிங்கம் த.பெ.கருப்பையா

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**குறுக்கு விசாரணை**

1. தாவா சொத்து எங்களுக்கு கிரைய பாத்தியப்பட்ட சொத்தாகும். தாவா சொத்தினை எனதுதந்தை கோரிப்பாளையம் பள்ளி வாசலுக்கு பாத்தியப்பட்டிருந்ததை கிரையம் வாங்கினார். பள்ளிவாசல் நிர்வாகித்தினிடமிருந்து கிரையம் வாங்கினாரா என்றால் எனக்கு தெரியவில்லை. தாவா சொத்துக்கள் மொத்தம் 13 இலக்கச் சொத்துக்கள் என்றால் சரிதான். தாவா சொத்துக்களில் சர்வே எண்.822/6-ல் 33 செண்டு எங்களுக்கு பாத்தியப்பட்டு எங்கள் அனுபவத்தில் உள்ளது. அதேபோல் சர்வே எண்.830/3-ல் 5 செண்டு நிலமும், சர்வே எண்.830/5-ல் 7-1/2 செண்டு நிலமும் எங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும். தாவா சொத்திற்கான எங்கள் கிரையத்திற்கு முன்பு உள்ள மூல பத்திரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, ஆனால் அந்த சொத்து வக்போர்டு சொத்து என்பதால் செட்டில்மெண்டு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். பள்ளிவாசலுக்கு பாத்தியப்பட்ட மொத்த சொத்து 456 ஏக்கர் 31 செண்டு என்றால் சரிதான், அதில் நாங்கள் கிரையம் பெற்றதாக சொல்லப்படும் சொத்துக்கள் சரியாக எந்த இடத்தில் உள்ளது என்று உட்பிரிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது.

2. வாதிகளின் தாயார் பெயர் பாண்டியம்மாள். தாவா சொத்துக்கள் வாதிகளின் தாயார் பாண்டியம்மாள் செட்டில்மெண்ட எழுதி வைத்ததன் அடிப்படையில் வாதிகளுக்கு பாத்தியம் என இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான், ஆனால் அது உண்மை அல்ல. தாவா சொத்தினை வாதிகள்தான் முதலில் உட்பிரிவு செய்தார்கள் என்றால் சரிதான். (குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)